ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
அவசரக் கூட்டம்

2022 ம் ஆண்டு மே மாதம் 25 ம் நாள் புதன் கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெற உள்ள அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

*முன்னிலை :- திரு. த. ரவிக்கண்ணன், B.B.A,*
*நகர்மன்றத் தலைவர்*

பொருள் எண் : 1

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் சொத்துவரி பொது சீராய்வு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 40032/2021/R1, Dated: 01.04.2022 ல் தெரிவித்துள்ளதன்படி சொத்துவரி மற்றும் காலிமனை வரி பொது சீராய்வு செய்வது குறித்த அறிவிக்கையினை தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளேடுகளில் பிரசுரம் செய்தமைக்கு ஆகும் செலவினத் தொகைக்கு மன்ற அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம்.
ந.க.எண் 2381/2022/A2

**தீர்மானம் 36 முன் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண் : 2

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 40032/2012/R1, Dated: 01.04.2022 ல் தெரிவித்துள்ளதன்படியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை அரசாணை ( நிலை ) எண் 52 நாள் 30.03.2022 ன் படியும் 01.04.2022 முதல் சொத்துவரி பொது சீராய்வு ( General Revision ) மேற்கொள்ளப்படவுள்ளது. இப்பணிக்காக பொது மக்களுக்கு சொத்துவரி மற்றும் காலிமனை வரி சுயமதிப்பீட்டு படிவங்கள் வழங்க வேண்டியுள்ளது. மேற்கண்ட சுய மதிப்பீட்டு படிவங்களை குடியிருப்பு படிவம், வணிக படிவம் மற்றும் தொழிற்கூட படிவம் என பயன்பாட்டின் தேவைக்கேற்ப அச்சிட்டும் வாங்கும் பணிக்கு உத்தேச செலவினத் தொகை ரூ.5,00,000/- க்கும் மேற்கண்ட பணியினை அவரச அவசியம் கருதி குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்க உள்ளூர் / கூட்டுறவு அச்சகம் மூலம் மேற்கொள்ள குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்ற அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம்.
ந.க.எண் 2381/2022/A2

**தீர்மானம் 37 முன் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண் : 3

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15-ஆவது மத்திய நிதி ஆணையம், 2022-2023-ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019-ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022-2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>சொத்துவரி:</u>

குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building) :

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non-Residential Building) :

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு **50**% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

காலிமனை வரி சீராய்வு:

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் .நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும்நிதி (Current Liabilities)(ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | ரூ.0.39/- |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம்<br>1) TWAD – 0.16/-<br>2) SURVEY 0.54/-<br>3) MANUAL WORKER GENERAL WELFARE FUND – 0.29/- | ரூ.0.99/- |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் (டுபிட்கோ, டுபிசெல், பிற) | இல்லை |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை)<br>1) PF – 0.25/-<br>2) CPS (EMPLOYEE) - 0.29/-<br>3) CPS (CONTRIBUTION) – 0.29/-<br>4) SPF – 0.002/-<br>5) FBF – 0.004/-<br>6) NHIS – 0.07/- | ரூ.0.91/- |
| | மொத்தம் | ரூ.2.29/- |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81-A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்வதற்காக நகர்மன்றம் தீர்மானம் எண் 2 நாள் 11.04.2022ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் கீழ்கண்ட தெருக்களுக்கு மண்டலங்கள் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | வார்டு எண் | தெருவின் பெயர் | தற்பொழுது உள்ள மண்டலம் | புதியதாக மாற்றம் செய்யப்பட வேண்டிய மண்டலம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | மங்காபுரம் மெயின் ரோடு | C- ZONE | B- ZONE |
| 2 | 2 | மங்காபுரம் மெயின் ரோடு | C- ZONE | B- ZONE |
| 3 | 2 | மதுரை ரோடு | C- ZONE | B- ZONE |
| 4 | 2 | மதுரை ரோடு (ஜி. எம் நகர்) | C- ZONE | B- ZONE |
| 5 | 3 | மங்காபுரம் மெயின் ரோடு | C- ZONE | B- ZONE |
| 6 | 7 | ஊத்துமலை பரதேசி மடம் தெரு | C- ZONE | B- ZONE |
| 7 | 33 | கோவிந்தன் நகர் காலணி | C- ZONE | B- ZONE |
| 8 | 33 | பண்டிட் ஜவஹர்லால் நேரு ரோடு | C- ZONE | B- ZONE |
| 9 | 6 | பெருமாள்பட்டி 2வது கீழத் தெரு | C- ZONE | B- ZONE |
| 10 | 6 | கோட்டைத் தலைவாசல் பிள்ளையார் கோவில் தெரு | C- ZONE | B- ZONE |
| 11 | 21 | சிவஞானபுரம் தெரு | C- ZONE | B- ZONE |
| 12 | 23 | சந்தைப்பேட்டை தெரு | C- ZONE | B- ZONE |
| 13 | 27 | அவிட்டன்புரம் தெரு | C- ZONE | B- ZONE |
| 14 | 27 | ரெங்கநாதபுரம் வடக்கு தெரு | C- ZONE | B- ZONE |
| 15 | 30 | மேட்டுத் தெரு வடக்கு வரிசை | C- ZONE | B- ZONE |
| 16 | 30 | மேட்டுத் தெரு தெற்கு வரிசை | C- ZONE | B- ZONE |
| 17 | 30 | மடவார்விளாகம் கீழரதவீதி | C- ZONE | B- ZONE |
| 18 | 30 | மடவார்விளாகம் தெற்கு ரதவீதி | C- ZONE | B- ZONE |
| 19 | 31 | மல்லபுரம் தெரு | C- ZONE | B- ZONE |
| 20 | 31 | இராஜபாளையம் ரோடு | B- ZONE | A- ZONE |
| 21 | 32 | மல்லபுரம் தெரு | C- ZONE | B- ZONE |
| 22 | 32 | முடுக்குத் தெரு | C- ZONE | B- ZONE |

மேலும் நகர்மன்றம் தீர்மானம் எண் 2 நாள் 11.04.2022ன்படி அனுமதிக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு குறித்த அறிவிக்கை 13.04.2022ம் தேதிய நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்ட நாளிலிருந்து 19.05.2022 வரை பொதுமக்களிடமிருந்து 13 ஆட்சேபணை விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன.

மேற்கண்ட ஆட்சேபணையில் சொத்துவரி அறிவிப்பையும் செயலையும் திரும்ப பெற வேண்டும் எனவும் சொத்துவரி விகிதம் (Rate of Tax) குறைக்கவும் சொத்துவரி விதிப்பை ரத்து செய்ய வேண்டும் எனவும் மண்டலம் (Zone) மாற்றம் செய்யக் கோரியும் வரிச்சுமையைக் குறைக்கக் கோரியும் தெரிவிக்கப்பட்டுள்ளது..

மேற்கண்ட ஆட்சேபணை விண்ணப்பங்களும் பரிசீலனை செய்யப்பட்டதில் இந்நகராட்சியிலிருந்து பிற துறைகளுக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை, கடன் தொகைகள், பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணப்பயன்கள் சேர்த்து சுமார் ரூ.2.29 கோடி செலுத்தப்பட வேண்டியதுள்ளது. மேற்படி தொகைகள் செலுத்துவதற்கும் பிற செலவினங்கள் மேற்கொள்வதற்கும் தற்போது உள்ள நகராட்சியின் ஆண்டு வருமானம் போதுமானதாக இல்லை. எனவே தற்போது நடைமுறையில் உள்ள சொத்துவரி விகிதம் 16 1/8% A மண்டல

மதிப்பு ரூ.2.10, B மண்டல மதிப்பு ரூ.1.60, C மண்டல மதிப்பு ரூ.0.90 ன்படி 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு பணி மேற்கொள்ளலாம்.

அலுவலகக்குறிப்பு–மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்2381/2021/அ2

**தீர்மானம் 38 –1.4.2022 முதல் சொத்துவரி சீராய்வு பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 4</u>

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண் 748/2008/குவ2, நாள் 21.09.2009 ம் தேதிய சுற்றறிக்கையில் நகராட்சி பகுதியில் வழங்கப்படும் புதிய குடிநீர் இணைப்புகளுக்கு முந்தைய ஆண்டில் வசூலித்து வரும் சாலை சீரமைப்பு மதிப்பீட்டுக் கட்டணத்திலிருந்து 5 சதவீதம் ஒவ்வொரு நிதியாண்டு துவக்கத்தில் உயர்வு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளபடி இந்நகராட்சியில் 2022-23 ம் ஆண்டு வசூலித்து வரும் மதிப்பீட்டுத் தொகையில் இருந்து 5 சதவீதம் உயர்வு செய்து கீழ் வரும் அட்டவணைப்படி ( சாலை சீரமைப்பு + மேற்பார்வை கட்டணம் ) 2022-23 ம் ஆண்டுக்கு வசூல் செய்யவும் கணிணியில் பதிவேற்றம் செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| மீட்டர் | தார்சாலை | சிமெண்ட் சாலை |
|---|---|---|
| 0-30 | 5093+1019= 6112 | 5885+1178= 7063 |
| 31-90 | 6452+1292 = 7744 | 7240+1449= 8689 |

உயர்த்தப்பட வேண்டிய கட்டணம் 2022-23 ம் ஆண்டு

| மீட்டர் | தார்சாலை | சிமெண்ட் சாலை |
|---|---|---|
| 0-30 | 6112 | 7063 |
| 31-90 | 7744 | 8689 |

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

( ந.க.எண் 4431/2020/E2 )

**தீர்மானம் 39 முன் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 5</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய வரிவிதிப்ப எண் ஒன்றிற்கு ரூ.100/- எனவும், குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் செய்வதற்கு வரிவிதிப்பு எண் ஒன்றிற்கு ரூ.50/- எனவும் கட்டணம் நிர்ணயம் செய்து வசூல் செய்யப்பட்டு வருகின்றது. மேற்கண்ட கட்டணங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு சுமார் 10 ஆண்டுகளாக எந்தவித மாற்றமுமின்றி அதே கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டு வருகின்றது. இந்நிலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியின் வருவாயினை அதிகரிக்கும் விதமாகவும், நகராட்சியின் நிதி நிலைமை மற்றும் செலவினங்களை கருத்தில் கொண்டும் சொத்துவரி, குடிநீர் பெயர் மாற்றக் கட்டணம் மற்றும் இதர படிவங்களுக்கு கீழ்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்ய மன்ற அனுமதிக்காக.

| வ.எண் | படிவம் | தொகை |
|---|---|---|
| 1 | சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய | ரூ.500/- ( வரிவிதிப்பு எண் ஒன்றிற்கு ) |
| 2 | குடிநீர் கட்டணம் பெயர் மாற்றம் செய்ய | ரூ.200/- ( வரிவிதிப்பு எண் ஒன்றிற்கு ) |
| 3 | குடிநீர் இணைப்பு பெற பதிவு கட்டணம் | ரூ.500/- |
| 4 | கட்டிட அனுமதி அனுபந்த படிவம் ஒன்று | ரூ.50/- |
| 5 | அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க இனங்கள் படிவம் ( D & O ) | ரூ.20/- |
| 6 | சொத்துவரி பெயர் மாற்ற படிவம் ஒன்று | ரூ.10/- |
| 7 | சொத்துவரி விதிக்கக் கோரும் படிவம் | ரூ.10/- |
| 8 | பிறப்பு சான்றிதழ் கோரும் விண்ணப்ப படிவம் | ரூ.10/- |
| 9 | இறப்பு சான்றிதழ் கோரும் விண்ணப்ப படிவம் | ரூ.10/- |
| 10 | சுகாதார சான்று | ரூ.1000/- |
| 11 | நான்குமால் அளவீடு | ரூ.1000/- |

அலுவலகக்குறிப்பு–மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்2939/2021/அ2

**தீர்மானம் 40 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 6</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளரின் அலுவலக உபயோகத்திற்கு தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் பொலிரோ ஈப்பு வாகனம் வாங்கப்பட்டு சுமார் 15 ஆண்டுகள் ஆகிவிட்டதால் பழுதடைந்து கழிவு செய்யும் நிலையில் உள்ளது. எனவே ஆணையாளர் பயன்பாட்டிற்கு ஒரு எண்ணம் பொலிரோ ஈப்பு வாகனம் மற்றும் தற்போது புதியதாக பொறுப்பேற்றுள்ள நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு ஒரு Scorpio வாகனம் ஆக மொத்தம் இரண்டு வாகனங்கள் வாங்குவதற்கு நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன் மொழிவு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- இரண்டு வாகனங்கள் வாங்க மன்றம் அனுமதி வழங்கலாம். குடிநீர் நிதியில் வாகனங்கள் வாங்க அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2480/2022/E1

**தீர்மானம் 41 முன் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 7</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மாரியம்மன் கோவில் கிழக்குப் பகுதியில் உள்ள நந்தவனம் செல்லும் நடைபாதை மேல் உள்ள சிலாப் உடைந்துள்ளது. மேலும் டீக்கடை அருகிலும் சிறுபாலம் உடைந்துள்ளது. அதன் காரணமாக பொது மக்கள் வடிகாலை கடந்து செல்ல சிரமமாக உள்ளது. எனவே பொது மக்கள் நலன் கருதி இரு இடங்களிலும் வடிகால் மீது காங்கீரிட் சிலாப் அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.15,000/-க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 1920/2022/E1

**தீர்மானம் 42 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 8</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் உள்ள சேர் மற்றும் டேபிள்கள் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு வாங்கப்பட்டு தற்போது சேர்கள் அனைத்தும் உடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே புதியதாக Teak Wood சேர்கள் 28 எண்ணம் வாங்க வேண்டியுள்ளது. எனவே நகர்மன்ற கூடத்திற்கு 28 எண்ணம் சேர்கள் ரூ.4,80,000/- மதிப்பீட்டில் வாங்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15 ன் கீழ் அனுமதிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 529/2022/E1

**தீர்மானம் 43 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 9</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மாரியம்மன் கோவில் கிழக்குப் பகுதியில் ஓடையை ஒட்டி உள்ள நடைபாதையில் சிறுபாலம் உடைந்து மக்கள் நடப்பதற்கு சிரமமாக உள்ளது. பொது மக்கள் நலன் கருதி உடன் சிறுபாலம் உடைந்துள்ளதன் மீது காங்கிரீட் சிலாப் அமைக்கவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.55,000/-க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 1756/2022/E1

**தீர்மானம் 44 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 10</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி நகர்மன்ற தலைவர் அறைக்கு Wall Panelling பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணிகள் ரூ.4,85,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 15 ன் கீழ் அனுமதிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண் 860/2022/E1

**தீர்மானம் 45 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 11</u>

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் உள்ள குடிநீர் குழாய், பகிர்மானக் குழாய், வால்வுகள் ரோப் வைப்பது மற்றும் பம்பிங் மெயின் ஏற்படும் கசிவுகள், செண்பக தோப்பு தண்ணீர் தலைமையிடத்தில் உள்ள மெயின் குழாய் கசிவுகள் சரி செய்வது ஆகிய பணிகளை வருடாந்திர பராமரிப்பு பணியாக 01.04.2022 முதல்

31.03.2023 வரை தனியார் மூலம் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். மேற்கண்ட குழாய் உடைப்பு பணிகளை உடனுக்குடன் சரி செய்தால் மட்டுமே பொது மக்களுக்கு குடிநீர் வழங்குவது பாதிக்காத வகையில் மேற்கொள்ள இயலும். எனவே குடிநீர் குழாய், பகிர்மானக் குழாய், வால்வுகள் ரோப் வைப்பது மற்றும் பம்பிங் மெயின் ஏற்படும் கசிவுகள், செண்பக தோப்பு தண்ணீர் தலைமையிடத்தில் உள்ள மெயின் குழாய் கசிவுகள் சரி செய்வது ஆகிய பணிகளை வருடாந்திர பராமரிப்பு பணியாக 01.04.2022 முதல் 31.03.2023 வரை தனியார் மூலம் மேற்கொள்ளவும் அதற்காக ரூ.12,00,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- குடிநீர் விநியோகம் நலன் கருதி பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண் 2516/2022/E1

**தீர்மானம் 46 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 12

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி நகர்மன்றம் பொறுப்பேற்றுள்ள நிலையில் சேர்மென் அறையில் மன்ற உறுப்பினர்கள் அமர்வதற்கும் சிறிய அளவில் கூட்டம் நடத்துவதற்கும் அலுவலக பயன்பாட்டிற்கும் சேர்கள் தேவைப்படுவதால் 100 எண்ணம் பிளாஸ்டிக் சேர்கள் வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.80,000/- க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம்.
ந.க.எண் 2480/2022/E1

**தீர்மானம் 47 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 13

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 29280/2020/IT, நாள் 31.03.2022 இணைய தள இணைப்பு கட்டணம் 01.07.2021 முதல் 31.12.2021 வரை BSNL நிறுவனத்திற்கு ரூ.96590/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இணை தள இணைப்பு கட்டணம் 01.07.2021 முதல் 31.12.2021 வரை ரூ.96590/- BSNL நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம்.
ந.க.எண் 2448/2022/E1

**தீர்மானம் 48 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 14

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சியில் உள்ள சின்டெக்ஸ் டேங்க் பராமரிப்புபுணி மேற்கொள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள மோட்டார் ரீ வைண்டிங், கன்டென்சர், பைப், கேபிள் மாற்றவும், ஹோஸ் பைப் மாற்றவும் உடனடியாக மோட்டார் பழுதுகள் பார்க்கவும் வேண்டியது மிகவும் அவசியமாகும். மேற்கண்ட மோட்டார் பராமரிப்பு மற்றும் பழுது பணிகளை வருடாந்திர பராமரிப்பு பணியாக 01-04-2022 முதல் 31-03-2023 வரை தனியார் மூலம் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். மேற்கண்ட குழாய் உடைப்பு பணிகளை உடனுக்குடன் சரி செய்தால் மட்டுமே பொதுமக்ளுக்கு குடிநீர் வழங்குவது பாதிக்காத வகையில் மேற்கொள்ள இயலும். எனவே சின்டெக்ஸ் டேங்க் பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள மோட்டார் ரீ வைண்டிங், கன்டென்சர், பைப், கேபிள் மாற்றவும், ஹோஸ் பைப் மாற்றவும் உடனடியாக மோட்டார் பழுதுகள் பார்க்கவும் அதற்காக ரூ12,00,000/- க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- குடிநீர் விநியோகம் நலன்கருதி பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண் 2517/2022/E1

**தீர்மானம் 49 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 15

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பகுதியில் அங்கீகாரம் பெற்ற மீன் மார்கெட் ஏதும் இல்லை. மீன் வியாபாரம் செய்பவர்கள் உழவர் சந்தை வடபுறம் உள்ள சாலையில் மீன் வியாபாரம் செய்து வருவதால் போக்கு வரத்திற்கும் பொது சுகாதாரத்திற்கும் மிகுந்த இடையூறு ஏற்படுகிறது. மேலும் மீன் வியாபாரம் செய்யும் சாலை அரசு மருத்துவமனையிலிருத்து பிரேதங்கள் வரும் வழியாகவும் உள்ளது. மீன் வியாபாரம் செய்பவர்களுக்கு உரிய வசதிகளுடன் மீன் மார்கெட் அமைத்துத்தர வேண்டியது தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ன் படி நகராட்சியின் கடமை ஆகும். மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் மீன் மார்கெட் இல்லாத நகராட்சிகளில் மீன் மார்கெட் கட்ட தமிழக அரசினால் நிதி ஒதுக்கீடு செய்ய உள்ளதாகவும் அதற்காக இடம்

தேர்வு செய்து முன்மொழிவுகள் அனுப்பவும் கோரப்பட்டுள்ளது. தற்போது மீன் வியாபாரம் செய்பவர்கள் உழவர் சந்தை வடபுறம் உள்ள சாலையில் மீன் வியாபாரம் செய்து வருவதால் அதன் அருகிலேயே மீன் மார்கெட் அமைத்து கொடுத்தால்தான் வியாபாரம் செய்பவர்களுக்கும் மீன் வாங்கும் பொதுமக்களுக்கும் வசதியாக இருக்கும்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி உழவர் சந்தை தெற்குப்புறம் உள்ள அரசு புறம்போக்கு இடம் சர்வே எண்: 867/1 பி1, பிளாக் எண்: 8 சர்வே வார்டு எண்: 4 ல் உள்ள பரப்பளவு 1550 மீட்டரில் மீன் மார்கெட் கட்ட சுமார் 269.00 சதுர மீட்டர் இடம் போதுமானதாகவும் தகுதியான இடமாகவும் உள்ளது . ஒவ்வொரு நகராட்சி பகுதியிலும் நவீன மீன் மார்கெட் அமைக்க வேண்டும் என்கிற தமிழக அரசின் கொள்கை முடிவின் படியும் ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பொதுமக்களுக்கு நவீன வசதிகளுடன் சுகாதாரமாக மீன் மார்கெட் கட்டி கொடுப்பதற்காகவும் ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி உழவர் சந்தை தெற்குப்புறம் உள்ள அரசு புறம்போக்கு இடம் சர்வே எண்: 867/1 பி1, பிளாக் எண்: 8 சர்வே வார்டு எண்: 4 ல் உள்ள பரப்பளவு 1550 மீட்டரில் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் நவீன வசதிகளுடன் சுகாதாரமான மீன் மார்கெட் கட்டுவதற்கு சுமார் 269.00 சதுர மீட்டர் இடம் ஒதுக்கீடு செய்து வழங்க விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம்.
ந.க.எண் 6996/2021/E1

**தீர்மானம் 50 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண் : 16

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி பேருந்து நிலையத்தில் 15 வது நிதிக்குழு திட்டத்தில் பேருந்து நிலைய கழிப்பிடம் மேம்பாடு பணி மேற்கொள்ளப்பட்டதில் கழிப்பிடத்தில் ஆண்களுக்கு சிறுநீர் கழிக்கும் Closet கூடுதலாக அமைக்க வேண்டியுள்ளது. மேலும் கூடுதலாக 4 கழிப்பிட அறை கட்ட வேண்டியுள்ளது. பெண்கள் கழிப்பிடத்தில் கூரை இல்லாமல் வெளியில் இருந்து பார்க்கும் நிலையில் உள்ளதால் நாக தகடு கூரை அமைக்க வேண்டியுள்ளது. பேருந்து நிலையத்திற்கு கூடுதலாக பொதுமக்கள் வந்து செல்வதால் மேற்கண்ட பணிகள் செய்ய வேண்டியது அவசியமாகும். பேருந்து நிலைய கழிப்பிடத்தில் மேற்கண்ட மேம்பாட்டு பணிகள் செய்யவும் அதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ2,30,000/ - க்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதி வழங்கலாம். பணியினை வருவாய் நிதியிலிருந்து செய்ய அனுமதிக்கலாம்.
ந.க.எண் 2349/2022/E1

**தீர்மானம் 51 முன் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண் : 17

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி மன்ற கூடத்திற்கு (Council Hall ) பின் வரும் விவரப்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம். |
|---|---|
| 1 | தரை பகுதியில் மரப்பலகை அமைத்தல் |
| 2 | ஏமல்சன் பெயிண்ட் அடித்தல் |
| 3 | மர வேலைகளில் பெயிண்ட் அடிக்க. |
| 4 | மர மேஜைகளில் வார்னிஷ் அடிக்க. |
| 5 | ஆலுமினிய கதவு |
| 6 | வாஷ் பேசின் |
| 7 | பி.வி.சி. டேப். |

எனவே மேற்கண்ட பணிகள் ரூ.4,85,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15 ன் கீழ் அனுமதிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
ந.க.எண் 603/2022/E1

**தீர்மானம் 52 பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் : 18

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி மன்ற கூடத்திற்கு (Council Hall ) பின் வரும் விவரப்படி மின் வயரிங் மற்றும் ஏ.சி. புதிதாக மாட்டும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம். |
|---|---|
| 1 | பேன் பாயிண்ட் வயரிங் வேலை. |
| 2 | லைட் பாயிண்ட் வயரிங் வேலை. |
| 3 | பவர் பிளக் பாயிண்ட் வயரிங் வேலை. |
| 4 | 2 டன் புதிய ஏசி மாட்டுதல் |
| 5 | ஏ.சி. சுவரில் மாட்ட எம். எஸ் ஆங்கிள். |
| 6 | ஏ.சி. வெளிபக்க யூனிட் சுவரில் மாட்ட எம். எஸ் ஆங்கிள். |
| 7 | 32 ஆம்ஸ் டி.பி. சுவிட்ச். |

எனவே மேற்கண்ட பணிகள் ரூ.4,95,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15 ன் கீழ் அனுமதிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
ந.க.எண் 663/2022/E1

**தீர்மானம் 53 பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண் : 19

பேருந்து நிலைய கழிப்பிடத்தில் மேம்பாட்டு பணிகள் ரூ 2,30,000/- மதிப்பீட்டில் செய்யம் பணிக்கு 28-04-2022 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டிற்கு விகிதம் |
|---|---|---|
| 1 | திரு ஜி.வெங்கடேசன். ஸ்ரீவில்லிப்புத்தூர். | 0.21% குறைவு |
| 2 | திரு கே.செந்தில்குமார், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 3.52% அதிகம். |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு ஜி.வெங்கடேசன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.21% குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு

1) மேற்கண்ட பணியினை ரூ2,30,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள பொருள் வைக்கப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு ஜி.வெங்கடேசன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.21 சதவீதம் குறைவாக உள்ளதை ஒப்புக்கொள்ளலாம். அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகாரம் செய்யலாம்.

ந.க.எண் 2349/2022/E1

**தீர்மானம் 54 முன் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண் : 20

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி அலுவலகத்தில் கணிணிகள், யூ.பி.எஸ், பிரிண்டர்கள் ஆகியவை வருடாந்திர பராமரிப்பு பணிக்கு 27-04-2022 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | விலை விகிதம். |
|---|---|---|
| 1 | M/S அபி எனர்ஜி கார்ப், புளியங்குடி. | ரூ.1,74,500/- |
| 2 | M/S விஸ்வின் பேட்டரி சேல்ஸ் & சர்வீஸ், இராஜபாளையம். | ரூ2,06,000/- |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S அபி எனர்ஜி கார்ப், புளியங்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு

1) மேற்கண்ட பணியினை ரூ1,75,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர் மன்ற தீர்மானம் எண்: 5 நாள்: 24-01-2022 ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

2) பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S அபி எனர்ஜி கார்ப், புளியங்குடி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண் 8110/2021/E1

**தீர்மானம் 55 முன் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 21</u>

15 வது நிதிக்குழு 2021-22 Untied Grant பணிகளில் மருத்துவர் காலணி நுண்உரக்குடில் கட்டிடத்திற்கு அணுகு சாலை மண் சாலையில் இருந்து பேவர் பிளாக் சாலை அமைத்தல். பணிக்கு 18-03-2022 தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | மதிப்பீட்டிற்கு விகிதம். |
|---|---|---|
| 1 | திரு ஜி.மணிகண்டன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 5.63 % அதிகம். |
| 2 | திரு எம்.கே.ஸ்ரீகுமரன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 115.44 % அதிகம். |

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு ஜி.மணிகண்டன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 5.63% அதிகமாக இருந்ததால் விலை விகிதம் குறைத்துக்கொடுக்க Negotiation அறிவிப்பு அனுப்பப்பட்டது. திரு ஜி.மணிகண்டன் தனது 24-03-2022 ம் தேதிய கடிதத்தில் விலைவிகிதத்தினை குறைத்து மதிப்பீட்டைவிட 4.95% அதிகமாக செய்து தர சம்மத்தித்துள்ளார். மேலும் கட்டுமான பொருள்கள் மற்றும் ஆட்கள் கூலி அதிகரித்துள்ளதால் மேலும் விலை விகிதம் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகின்றது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1) மேற்கண்ட பணியினை ரூ22,40,000/- மதிப்பீட்டில் மேற்கொள்ள ந.ம.தீ. எண் 18 நாள் 24.1.2022 ம் தேதி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

2) தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பிரிவு நடைமுறை நூல் பிரிவு 2.7.2 ன்படி ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டினை விட 5% வரை கூடுதலான ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

திட்டப்பணியாக உள்ளதாலும் குறித்த காலத்தில் பணி முடிக்க வேண்டியதிருப்பதாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் திரு ஜி.மணிகண்டன் ஒப்பந்தக்காரரின் மதிப்பீட்டினைவிட 4.95% கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண் 7444/2022/E1

**தீர்மானம் 56 முன் ஒப்புதல் வழங்கப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 22</u>

நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணிகளுக்கு Key Board, Mouse ஆகியவை Toner வாங்க 30.03.2022 பின்வரும் மூன்று நிறுவனங்கள் விலைப்புள்ளி பெறப்பட்டது.

| | | சன் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர் | | K.B. சிஸ்டம்ஸ் சர்வீஸ், ஸ்ரீவில்லிபுத்தூர். | | டிஜி டெக் சிஸ்டம்ஸ் | |
|---|---|---|---|---|---|---|---|
| வ.எண் | பணி விவரம் | விலை | தொகை | விலை | தொகை | விலை | தொகை |
| 1 | Key Board – 13 | 1500 | 19500 | 1650 | 21450 | 1700 | 22100 |
| 2 | Mouse -13 | 800 | 10400 | 925 | 12025 | 950 | 12350 |
| | | | 29900 | | 33475 | | 34450 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சன் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்புக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

ந.க.எண் 2084/2022/E1

**தீர்மானம் 57 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண் : 23</u>

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி மாரியம்மன் கோவில் கிழக்குப்பகுதியில் ஓடையை ஒட்டி உள்ள நடைபாதையில் சிறு பாலம் உடைந்துள்ளதன் மீது காங்கிகீரீட் சிலாப் அமைக்கும் பணிநினை ரூ55000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள பின்வரும் மூன்று விலைப்புள்ளிகள் 19-01-2022 அன்று பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | மதிப்பீட்டிற்கு விகிதம். |
|---|---|---|
| 1 | திரு க.செந்தில் குமார், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 0.03 % குறைவு. |
| 2 | திரு கோ.வெங்கடேசன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 6.18 % அதிகம். |
| 3 | திரு எம்.கே.ஜின்னா, ஸ்ரீவில்லிப்புத்தூர். | 7.74 % அதிகம். |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு க.செந்தில் குமார் ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| | |
|---|---|
| அலுவலகக்குறிப்பு :- | குறைந்த விலைப்புள்ளி ஒப்புக் கொள்ள அனுமதிக்கலாம். |
| | ந.க.எண் 1756/2022/E1 |

**தீர்மானம் 58 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் : 24

ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி மாரியம்மன் கோவில் கிழக்குப்பகுதியில் உள்ள நந்தவனம் செல்லும் நடைபாதை மற்றும் டீக்கடை அருகில் இரு இடங்களிலும் வடிகால் மீது காங்கீரீட் சிலாப் பணிக்கு பின்வரும் மூன்று விலைப்புள்ளிகள் 19-01-2022 அன்று பெறப்பட்டது.

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர். | மதிப்பீட்டிற்கு விகிதம். |
|---|---|---|
| 1 | திரு க.செந்தில் குமார், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 0.12 % குறைவு. |
| 2 | திரு கோ.வெங்கடேசன், ஸ்ரீவில்லிப்புத்தூர். | 4.70 % அதிகம். |
| 3 | திரு எம்.கே.ஜின்னா, ஸ்ரீவில்லிப்புத்தூர். | 7.83 % அதிகம். |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள க.செந்தில் குமார் ஒப்பந்தக்காரரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

| | |
|---|---|
| அலுவலகக்குறிப்பு :- | குறைந்த விலைப்புள்ளி ஒப்புக் கொள்ள அனுமதிக்கலாம். |
| | ந.க.எண் 1920/2022/E1 |

**தீர்மானம் 59 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் : 25

இந்நகராட்சிக்கு 2022-23 ம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள் வெள்ளை பேப்பர் மற்றும் கம்ப்யூட்டர் பொருட்கள் அ4, அ5 பேப்பர் மற்றும் டோனர்கள் மற்றும் சாமான்கள் வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு ரூ.10,00,000/- ( பத்து லட்சம் மட்டும் ) க்கு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 60 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் : 26

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 03.04.2018 முதல் அலுவலக உதவியாளராக பணி புரிந்து வரும் திரு. கு. பாலமுருகன் என்பவர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக அருகில் உள்ள விருதுநகர் நகராட்சிக்கு அலுவலக உதவியாளராக பணி மாறுதல் கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். திரு. கு. பாலமுருகன் அலுவலக உதவியாளர் பணி மாறுதல் விண்ணபத்தினை திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு மேலனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக்குறிப்பு :- | மன்றம் அனுமதிக்கலாம். |
| | ந.க.எண் 3074/2022/C1 |

**தீர்மானம் 61 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் : 27

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 09.12.2021 முதல் அலுவலக உதவியாளராக பணி புரிந்து வரும் திருமதி. ஞா. பாக்கீஸ்வரி என்பவர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக அருகில் உள்ள அருப்புக் கோட்டை நகராட்சிக்கு அலுவலக உதவியாளராக பணி மாறுதல் கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். திருமதி. ஞா. பாக்கீஸ்வரி அலுவலக உதவியாளர் பணி மாறுதல் விண்ணபத்தினை திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநருக்கு மேலனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக்குறிப்பு :- | மன்றம் அனுமதிக்கலாம். |
| | ந.க.எண் 2935/2022/C1 |

**தீர்மானம் 62 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் : 28

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட பயணியர் விடுதியினை தவணை காலம் முடிவடைந்ததால் மேற்கண்ட குத்தகை இனத்தினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்து விட்டதாக குத்தகைதாரரின் 20.04.2022 ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார், மேலும் மேற்கண்ட குத்தகை இனம் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டு விட்டதாக வருவாய் ஆய்வாளரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட பயணியர் விடுதிக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதிக்காக.

அலுவலகக்குறிப்பு :- அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 2629/2022/A2

**தீர்மானம் 63 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் : 29

